ISSN:2582-9599



# முக்தி பெரும் நிலையிலும் ஆளுடைப் பிள்ளையின் மனித நேயப் பண்பாடு

21

**லோ. ரதி**

**நவரசம் அறிவியல் மற்றும் கலை கல்லூரி**

**அரச்சலூர்**

**ஆய்வுச் சுருக்கம்**

உயர்திணை உயிர்களுக்கு இடையே இவ்வுணர்வு நிலை பெற்று இருக்கும். அவை 'பண்பாடு' என்ற இவ்வுணர்வு மனித சமுதாயத்தில் மக்களை இணைக்கும் பாலமாக செயல்படுகிறது. உணர்வு இல்லையே மனித சமூகம் வனத்தில் வாழும் விலங்குகளுக்கு ஒப்பானதாகிவிடும். மனிதக் கூட்டங்களின் குழுவே சமுதாயம் சமுதாயங்களில் குழுவே பாரதம்.

மனித சமூகத்தை 'பண்பாடு' என்ற இணைப்புச் சங்கிலி தான் நம்மை அடையாளம் காட்டும் வரலாற்றுப் பெட்டகம். நம் பாரதத்தை உலக அளவில் மதிப்புறு வைப்பதும் இப்பண்பாட்டு உணர்வு தான். பண்பாட்டு வழியில் ஆளுடைப் பிள்ளையின் முக்தி பெரும் நிலையின் பண்பாட்டை வெளிப்படுத்துவதை காண இவ்வாய்வில் மூலம் ஆவல் .

**திறவுச்சொற்கள்**

பண்பாட்டு மரபு வழியில் ஆளுடைப்பிள்ளையின் முத்தி பெரும் நிலையை விளக்குதல்.

## முன்னுரை

மனித சமுதாயத்தில் வாழும் மக்களிடையே தன்னுணர்வு மேம்பட்டு காணப்படும் தன்வீடு, தன்மனைவி, தன்மக்கள் என்று குறுகிய வட்டத்திற்குள் வாழுபவர்களிடையே சண்பைநகர், திருப்பெருமண நல்லூர் மக்கள் அனைவரும் உய்விக்கும் பொருட்டு மனதாலும், செயலாலும் வாழ்ந்து காட்டிய சிவனடியார்களில் வயதில் குறைந்தவரும், தொண்டர்சீர் பரவுவாரின் திருத்தொண்டர் புராணத்தில் புராணம் பாதி ஞானக்குழந்தை புகழ்பாதியும் அமைந்த சம்பந்தரின் மனிதநேயத்தை பண்பாட்டு உணர்வுடன் குறுங்காய்வு மூலம் பெருமை படுத்துவதே இக்கட்டுரையின் பெரும் நோக்கமாகும்.

## மனிதநேயம் – வரையறை

மனித மனத்தில் தோன்றுவது மனிதநேயமாகும். விலங்கினங்களிலிருந்து மனிதனைப் பிரித்துக்காட்டும் வகையில்

‘மக்கள் தாமே ஆறு அறிவுயிரே’

- நூ.பா.1532:3

எனத் தொல்காப்பியர் சிறப்பித்துக் கூறுகிறார். மனவறிவுடைய மனிதர்கள் ஆறு ஆறிவுடையவர் எனும் இக்கருத்தில் மனமென்பது மையமாக உள்ளது. மனம், நெஞ்சம், உள்ளம், சிந்தை, சித்தம், அகம், இதயம் போன்ற பல சொற்கள் தமிழில் வழங்கப்படுகின்றன.

தியாகம் உள்ளிட்ட மனித மனத்தில் பொதிந்துள்ள நல்ல பண்புகள் யாவும் பிறரிடம், பிறர்

உயிர்களிடம் வெளிப்படுத்தப்படும் பொழுது அது நேயமாக அமைகிறது. மனித நேயம் என்பது மனத்தின் தன்மையை குறிப்பதாகும். அது மனிதனுக்கும் அவனுடைய நடவடிக்கைகள், செயல்திறன், பேரார்வம், நலன்கள் ஆகியவற்றுக்கும் முதன்மை முக்கியத்துவம் அளிப்பதாகும். தனிமனிதப் பண்புகளையும், நலன்களையும், இருப்பையும் அடிப்படையாகக் கொண்ட இந்த மனிதநேயப் பண்புகள் அகவயக் கோட்பாடாக (Subjective theory) அமைகிறது.

**திருஆளுடைய பிள்ளை மாட்சிமை**

ஒரு சமயம் தேவர்களும், சிவகணங்களும் அதிசயம் ஒன்றைக் காண விழைந்து விண்ணிலே கூடி மலர்மாரி பொழிந்தனர். மாரி மலர்களுக்கிடையே பக்தி அனுமானக் காட்சியாக நாமும் நோக்குகையில், பூம்பாவை தம் தோழிகளோடு மலர்களை பறித்துவர நந்தவனத்திற்குச் சென்றாள். சென்ற இடத்தில் பாம்பு தீண்டவே பூம்பாவை மயக்கமுற்றாள். செய்தியை அறிந்த சிவனேசர் அலறித் துடித்தார். மருத்துவர்களாலும் மாந்திரிகர்களாளும் பாம்பின் விடத்தை இறக்கமுடியாமல், இறுதியில் பூம்பாவை இறந்தாள்.

இப்பூம்பாவையைத் தான் சிவபாதவிருதயர் மகனுக்கு திருமணம் செய்து வைப்பதாக அர்ப்பணித்து தீர்மானம் செய்தவர். தகனம் செய்த தன் பெண்ணின் எலும்பையும், சாம்பலையும் குடத்தில் இடர்த்தி சிவபாதவிருதயர் மகனிடம் ஒப்படைக்க எண்ணினார். மயிலைக்கு அடியாருடன் சிவபாதவிருதயர் மகனார் வந்த வழியில் வீழ்ந்த சிவநேசரை பற்றி அடியார்கள் மூலம் அறியவே, விரைந்து திருக்கபாலீச்சுரம் இறைவனையும், இறைவியும் வணங்கி துதித்த பின்னர்,

சிவநேரசரை நோக்கி இக்கோயிலின் புறமதில் வயிற்கண் குடத்தை எடுத்துவரச் சொன்னார். கபாலி நாதனை மனதில் திதித்து, “மட்டிட்ட புன்னையங் காணன் மடமயிலை” என்னம் பதிகத்தை பாடிய போது பத்தாவது பாடல் பாடிய உடன் பூம்பாவை இறக்காமல் இருந்திருந்தால் என்ன வயது ஆகுமோ அதே பருவ வயதில் குடத்தின் வெளியே தோன்றினால். தன மகளை சிவபாத இருதயர் மகனுக்கு திருமணம் செய்ய எண்ணியவர்களுக்கு “இவள் என் மகளாவாள்” என்று கூறியவர் ஆளுடைப்பிள்ளை என்னும் திருஞானச் சம்பந்தரே ஆவார்.

**திருக்கயிலை மலைக்கு வழி நமச்சிவாய மந்திரமே**

மனித நேய சிந்தனை பண்பில் சம்பந்தர் குறைந்தவரல்லர் என்பதை கீழ்வரும் குறட்பாவால் உணரலாம்.

“ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான்”

- குறள் 214

மனிதச் சமுதாயத்தில் தானும் ஒருவன் என்பதை உணர்ந்து பிறர்க்கு உதவி செய்து வாழ்பவன் போல ஞானக் குழந்தையான அருளுடைப்பிள்ளையும் பலவகை அலங்காரங்களுடன் நெஞ்சில் உருத்திராட்சமும் கையில் காப்பும் கட்டியவாறு திருமண கோலத்துடன் மடத்தில் எழுந்தருளி இருக்கையில் அமர்ந்திருந்தார். வலப்புறமாக மணப்பெண்ணையும் அமர வைத்தனர். பல சடங்குகளுக்கு பிறகு அம்மையாருடன் கோவிலுக்குச் சென்று முன்னாளில் தன்னை ஆட்கொண்டது

போன்று இச்சமயமும் ஆண்டருளும் என்று எண்ணி நல்லூரப் பெருமணம் எனும் பதிகத்தினை சிவபெருமானை நோக்கி “நாதனே என்றும் நம்பனே” என்று பாடி கொண்டிருக்கையில் ஆச்சரியராக நீயும் உன் மனைவியும் மற்றும் புண்ணிய திருமணத்தை காண வந்தவர்கள் யாவரும் எம்மிடத்தில் சோதியுள்ளாக தோன்றும் வழியில் வந்தடைவீர் என்று கூற, அதைக் கேட்ட ஞானசம்பந்தர் உலகம் உய்வு பெறச் செய்யும் அருட்செயலாக

“ஞானம் உய்ய வழியினை அருளிச் செய்வார்”

- (பெ. புரா. 1247)

என்ற வரிகளுக்கிணங்க

| | |
|---|---|
| நமச்சிவாய (பஞ்சாட்சர மந்திரம்) | சூரியன் உலகிற்கு முதன்மை ஆனது போன்று நமச்சிவாய முதன்மையானது. |
| | பெருமையுடைய திருஐந்தெழுத்தை ஓதிடுவோர் தேவர்களாகும் தகுதியை பெறுவர். |
| | திரு ஐந்தெழுத்தை ஓதிடும் மெய்யடியார்களை எமதூதர்களும் அஞ்சி விலகிச் சென்றிடுவார். |
| | கொடி பாவம் புரியவர்கள் ஐந்துதெழுத்தை ஓதினால் பழிபாவங்களிலிருந்து விடுபட்டு நன்மை பெற்றிடுவர். |
| | பந்த பாசங்களால் பிணைக்கப்பட்டு கொடிவினைகள் யாவும் நீங்க திருஐந்தெழுத்தை இடைவிடாது ஓதினால் திருவருள் என்னும் பெருஞ்செல்வம் பெறுவர். |
| | ஏழு நகரங்களில் புகுமாறு பெரும் பாவங்களைச் செய்தாலும் ஐந்தெழுத்து நாமத்தை ஓதிவர உருத்திரக் கணத்தினராய் விளங்கும் பேறுபெறலாம். |
| | இலங்கை வேந்தன் ராவணின் பெருவிரல் ஒன்றினை தன் திருவடியால் ஊன்றி அடர்த்திய போது இலங்கை வேந்தன் ஓதிய நாமம் திருவைந்தெழுத்தாகும். மேலும், திருமாலும் பிரம்மனும் திருவடி திருமுடியடி தேடி காணாத நிலையிலும் அவ்விருவரும் உரைத்தது ஐந்தெழுத்து நாமமே ஆகும். |

இவ்வாறு எல்லாம் பேரொளிப் பெருஞ்சுடராய் அங்கு நின்ற ஈசனை, சம்பந்தர் பெருமான் போற்றித் துதித்து வழிபாடு செய்து சோதியுள் சென்றிடும் வழியை நெறிப்படுத்தி அனைவருக்கும் மெய்ஞ்ஞானம் பெற்றிட வேண்டி திருவைந்தெழுத்தின் பெருமை விளங்கும் ஆச்சாள்புரம் பதிகத்தை மனிதநேயத்துடன் பாடியருளி விளக்கினார்.

**சோதியுள் புகுந்தவர்கள்**

இருவினைகளின் தொடர்பினை அறுக்க வல்லவர் திருஞானசம்பந்தர் என்பதனை அருள்மொழி தேவர் தம் புராணத்தில் பெருமைப்படுத்தியுள்ளார்.

“இரு வினைகளின் பந்தச்
சார்பொ ழிப்பவர்

- பெரி. புரா. 1187

இத்தகைய அருளுடைப்பிள்ளையின் திருவாக்கினை கேட்ட திருமண நிகழ்விற்கு வந்தவர்கள் அனைவரும் சம்பந்தர் பெருமான் கூற, திருநீலநக்கர், முருக நாயனார், சிவபாத இருதயர் அவரது துணைவியார், நம்பியாண்டாரும் மனைவியும், திருநீலகண்ட பெரும்பாணர் முதலிய அனைவரும் அவர்களது சுற்றமும் அச்சோதியுள் புகுந்தனர். சம்பந்தரை முத்து பல்லக்கைச் சுமந்து வந்தவர்களும், சைவர், பாசுபதர், மகாவிரதர், காளமுகர், வாமர், வைரவர் என்று அறுவகை உட்சமயிகளும், வைதீக சைவர், சைவ சித்தாந்தியர் முதலானோரும் அச்சோதியுள் புகுந்தனர். “யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்” என்ற திருமூலர் வாக்கும் இங்கு ஒப்ப நோக்கத்தக்கது. இறுதியில் திருஞானசம்பந்தர், தாம் கைப்பிடித்த மணமகளுடன் சோதியை வலம் வந்து அதனுள் புகுந்து சிவ சாயுச்சியம் நிலையை அடைந்தார்.

**முடிவுரை**

தான் முக்தி பெறும் நிலையிலும் தன்னை அல்லாது தன்னுடன் சுற்றிணைந்து வாழும் சமுதாயத்தினரையும், தம் பெற்றோர்களையும், அடியார்களையும் திருவைந்தெழுத்து மந்திரத்தை ஓதி, முக்தி பெறச் செய்தது மனிதநேயத்தின் அடிப்படையிலும், பக்தி உலகத்தில் பேரருள் நிலையிலும் இச்செயலானது உச்ச நிலையாகும்.

**பார்வை நூல்கள்**


| நூல் | ஆசிரியர் |
|---|---|
| திருக்குறள் (எளிய உரை) | மு.பெரி.மு.பெரியசாமி |
| பெரியபுராணம் (தெளிவுரை) | உரையாசிரியர் முனைவர் சிவ.திருச்சிற்றம்பலம் |
| திருஞானசம்பந்தர் தேவாரம் பாகம்-3 (இனிய உரை) | கோ.பெரியண்ணன் |
| தொல்காப்பியம் | தமிழண்ணல் |